# நிலாவின் நூலகம் - 9

## *திருகோணமலை அறிவியல் போராட்டமே சனநாயக போராட்டம்*

**மீள்பதிவு**.

அனைவருக்கும் பணிவான வணக்கம்.

இந்தக் கட்டுரையானது என்னால் 28/07/2021 அன்று எழுதப்பட்டது. இந்தக் கட்டுரையில் எழுதிய பல விடயங்கள் இன்று உண்மையாகி மக்கள் முன்னே வெளிப்பட்டு நிற்கிறது

மீண்டும் மீண்டும் வலியுறுத்தி சொல்கின்றோம். தமிழீழம் அமைவதை இறைவனாலும் தடுக்க முடியாது.

**அறிவியல் போராட்டமே சனநாயக போராட்டம்**

👇👇👇👇

விடுதலைப்புலிகள் ஆயுதம் தூக்கிப் போராடிய சம காலத்திலேயே அறிவாயுதமும் ஏந்தி இலங்கைத் தமிழர்கள் போராடினார்கள்.இந்த அறிவியல் போராட்டமானது பெருமளவில் மக்களின் கண்களுக்கு புலப்படாமல் இருந்தது. வீரத்தை விரும்பும் தமிழினம் அறிவியல் போராட்டத்தை விட ஆயுத போராட்டத்தை அந்த போராட்டத்தின் வெற்றிகளை கொண்டாடி மகிழ்ந்தது. எது எப்படியாக இருப்பினும், தமிழீழ தேசிய தலைவரின் மாவீரர் நாள் உரையும் அந்த உரைசொன்ன செய்திகளையும் அறிவியல் போராட் டத்தின் மூலவேர்கள் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டு இருந்தார்கள். தேசிய தலைவரின் கட்டளைகளையும் ஆயுதப்போராட்டம் மௌனத்தை அடையப்போகின்றது என்பதையும் அறிவியல்போராட்ட சக்தியினர் ஆழமாக 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே உணர்ந்தும் கொண்டார்கள்.

2009 வைகாசி 18 உடன் ஆயுதப்போராட்டம் மட்டுமே மௌனத்தை தழுவியது. 18 வைகாசி 2009 அன்று ஆயுதப்போராட்டம் மௌனத்தை தழுவிய போதும், ஆயுதப்போராட்டமும் அதன் வெற்றிகளும் மக்களின் மனதில் வீற்று இருந்த காரணத்தால்; வெற்றிபெற்ற ஆயுதப்போராட்டத்தின் நினைவுகளை மனதில் சுமந்த மக்களுக்கு, விடுதலைப்புலிகள் முழுவதுமாக அழிந்து போனார்கள் என்று கலங்கியவர்கள் அதனை அப்படியே நம்பினர்.

இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த சம காலத்தில் அறிவியல் போராட்டமும் ஆரம்பித்தது என்பதனை இலங்கைத் தமிழர்கள் முழுவதுமாக மறந்து விட்டனர்.

இலங்கைத் தமிழ் மக்கள் அறிவியல் யுத்தத்தை மறக்க இலங்கைத் தமிழர்களின் எதிரிகளும், இந்துசமுத்திர பிராந்தியத்தின் போட்டியாளர்களும், இந்திய எதிர்ப்பாளர்களும் இலங்கைத் தமிழரிடையே உள்நுழைந்து மிக வேகமாக பணியாற்றிக் கொண்டு இருந்தனர்.

👇

இலங்கை மக்களுக்கு அவர்களின் இனவிடுதலை சாத்தியமற்ற ஒன்று என நம்பவைக்க ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு மரணத்தை தழுவிய மாவீரர்களின் உறவினர்களது பசப்பு வார்த்தைகளும், புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்த மிக முக்கிய அமைப்புக்களின் தலைமைத்துவ அமைப்பினரின் உரைகளும் அவர்கள் தொடர்ச்சியாக பொறுப்பற்ற வகையில் செய்த செயல்களும், இலங்கையில் இருந்த தமிழ்த்தேசியவாதிகளாக தம்மை அடையாளப்படுத்தியவர்களின் இரட்டைத் தன்மையும், பொறுப்பற்ற செயல்களும், இயல்பிலேயே சமூகத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகளும் காரணமாயின.

இத்தகைய இந்த சமூக மாற்றத்தால் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடேயும், புலத்தில் இருந்த இலங்கைத் தமிழர்களிடையேயும் பொழுதுபோக்கு அரசியல் கலாச்சாரம் உருவானது.

இந்த பொழுதுபோக்கு அரசியல் கலாச்சாரமானது தமிழீழ மண்ணை மீட்டெடுக்க போராடியவர்களை ஞாயிறு விடுமுறை நாட்களில் ஊருலா செல்லும் சுற்றுலா போல சென்று வெற்றுக் கோசமிடுவதே இனவிடுதலையை வெற்றிபெற போதுமானதென்ற தொடர் மயக்கத்தில் மக்கள் வாழ்த்திட்டால் போதுமென்ற மனநிலையை உருவாக்கியது.

இலங்கைத் தமிழர்களின் இனவிடுதலைப் போராட்டம் அந்த மக்களுக்கு கொடுத்த தாழ்வுச் சிக்கல்

👇

ஆயுதம் தாங்கிய உண்மையான போராளிகளையும் அவர்களது உறவினர்களையும் மக்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் அவர்களை வெளியுலகில் அடையாளம் கண்டிருந்தனர். இவர்கள் 2009 ஆம் ஆண்டின் பின்னர் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு வந்ததும், மரணத்தை தழுவிய சில மாவீரர்களின் உறவினர்கள் சொல்லிய தவறான செய்திகளை மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்த மாவீரர்களின் உறவினர்களுடன், புலம்பெயர் தேசங்களுக்கு 2009 ஆம் ஆண்டிலும், அதன் பின்னரும் தப்பிவந்த சில சிங்கள முகவர்களுக்கும் இலங்கைத் தமிழர்களின் கட்டமைப்பின் விசுவாசிகளாக இலங்கைத் தமிழரிடையே கலந்திருந்தனர்.

ஏலவே புலம்பெயர் தேசத்தில் இருந்த மாவீரர்களின் உறவினர்களின் கூட்டணிக்கும், புதிதாக வந்தவர்களுக்கும் இடையிலான யுத்தத்தில், உண்மையாக விடுதலைப் போராளியாக இருந்தவர்கள்,

தன்னையும் தன் குடும்பத்தையும் கவனிக்கவேண்டிய துர்பாக்கிய நிலையில் இருந்தவர்கள் என இருதரப்பினர் மௌனமாகிட, போலியான சிங்கள, பாகிஸ்தானிய, சீன முகவர்கள், விடுதலைப்புலிகள் உறுப்பினர்களாக தோற்றம் பெற்று பொதுவெளியில் விடுதலை புலிகளாக மாறி உலவ ஆரம்பித்தார்கள். இவர்களுக்கான நிதிபலத்தை, விளம்பரத்தை, அந்தந்த நாடுகள் சகல வழியிலும் வழங்கிக்கொண்டிருந்தனர்.

**விடுதலைப்புலிகள் உறுப்பினராக போலியாக தோற்றம் பெற்றவர்கள் யார்?**

1) விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து 1992 ஆம் ஆண்டில் இருந்து 2000 ஆண்டுவரைக்கும் விலகிய முன்னாள் போராளிகள்.
2) விடுதலைப்புலிகளால் தமது அமைப்பின் நிர்வாகப் பணிக்காக, சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட நபர்கள். (இலங்கையிலும் , புலம்பெயர் தேசங்களிலும்)
3) விடுதலைப்புலிகளின் ஆரம்ப காலத்தில் போராட்டத்தில் தம்மை இணைத்து மாவீரராகிப் போனோரின் உறவினர்கள், நண்பர்கள், அவர்களின் பெயரில் விடுதலைப்புலிகளின் சொத்தை தமதுடைமை ஆக்கியவர்கள்.
4) விடுதலைப்புலிகளின் அரசியல் சார் துறைகளில் இலங்கையில் பணியாற்றியவர்களும், சமாதானகாலத்தில் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தொழிற்பட்ட அரசியல் துறை சார் பணியாளர்களும் அவர்களுடன் பயணித்த எச்சைகளும்.
5) விடுதலைப்புலிகளின் ஊடகத்தில் பணியாற்றிவிட்டு பின்னர் புலம்பெயர்ந்த வர்களும், இலங்கையில் இப்போதும் வாழ்வோரும்
6) இலக்கிய துறைகளில் பணியாற்றிய இலக்கியவாதிகளும் கவிஞர்களும் நிதர்சனம் பிரிவில் இருந்த பலரும்.
7) 2009 ஆம் ஆண்டின் பின்னர் முள்ளிவாய்க்காலில் இருந்து தப்பியோடி சிங்கள அரசிடம் பிடிபட்டும் பிடிபடாமலும் தப்பிவந்த சிலர்.
8) 2004 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளால் அரசியல் தேர்தலில் முன்னிறுத்தப்பட்டவர்களில் பலர்

மேற்குறித்த வகையினராக பலபோலி நபர்களை அதிகளவில் கொண்டிருந்தபடி விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டமானது மௌனமானது.

இதன் பின்னர் ஈழத்தமிழர்களின் நியாயமான அபிலாசைகளுக்காக அறிவியல் யுத்தத்தை செய்ய புறப்பட்டவர்களுக்கு மேற்குறித்தவர்களின் நகர்வுகளானது இலங்கைத் தமிழர்களின் இனவிடுதலை இலக்கை வென்று எடுப்பதில் பாரிய சிக்கலை ஏற்படுத்தியது.

**விடுதலைப் புலிகள் என வேடமணிந்த போலிகள் செய்த குற்றங்கள்**

1) புலம்பெயர் நாடுகளிலும், இலங்கையிலும் விடுதலைப்போராட்டத்தை காட்டி விடுதலைப்புலிகளின் முகத்தை அணிந்துகொண்டு சுயநல அரசியலிலும் நீதிக்கு புறம்பான பல்வேறு குற்றங்களையும் இழைத்தார்கள்.
2) பல்வேறுபட்ட பண பரிவர்த்தனைகளையும் மக்களுக்கான சேவை என்கின்ற பெயரில் பல்வேறுபட்ட தவறான செய்கைகளிலும் ஈடுபட ஆரம்பித்தார்கள்.
3) அதுமட்டுமன்றி இவர்களில் பலரும் சிங்கள அரசின் தீவிர விசுவாசிகளாக மாறினார்கள்.
4) அத்துடன் மட்டும் நின்றுவிடாது சிங்கள அரசின் வழிநடத்தலின் கீழ் இந்திய நாட்டின் அரசியலுக்குள் தலையிடுவதன் ஊடாக அதாவது ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டு அரசியலுக்குள் தலையீடு செய்வதன் ஊடாக ஈழத்தமிழர்களுக்கான அபிலாசையை நிறைவேற்றிட முடியாமல் அல்லது இந்திய அரசு தொடர்ச்சியாக ஈழத்தமிழர்களை எதிரியாக பார்க்கின்ற நிலையை உருவாக்கினார்கள்.

இது இலங்கைத் தமிழர்களின் அறிவியல் போராட்டத்திற்கு மிகப்பெரும் சவாலாக மாறியது. இத்தகைய சவால்களுக்கு முகம்கொடுத்த அறிவியல் யுத்தத்தின் நாயகர்களை, துரோகிகள் என்றும், சிங்கள கைக்கூலிகள் என்றும், பாலியல் குற்றவாளிகள் என்றும், இந்திய தேசத்தின் உளவமைப்பின் முகவர்கள் என்றும், மேற்குறித்த போலிப்புலிகள் முத்திரை குத்தி தமது வேட்கையை தொடர்ந்தார்கள்.

பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுத்த இலங்கைத் தமிழர்களது அறிவியல் யுத்தமானது.

கொரானா என்கின்ற விச கிருமியின் காலத்தின் வலுவாக மீண்டும் ஆக்ரோசமாக எழுந்தது. பேனாக்களால் இலங்கைத் தமிழர்களின் விடுதலைக்கான வேட்கை களை வென்று எடுக்க ஆதாரங்களுடன் எழுத ஆரம்பித்தார்கள்.

ஆயுத போராட்டம் மௌனத்தை தழுவினாலும் எழுத்தாணிகளை கொண்டு அறிவியல் போராட்டம் முளைவிட்டது.

அறிவியல் போராட்டத்தின் துரித எழுச்சியை சகித்துக்கொள்ள முடியாத ஆயுதப்போராட்டத்தின் எச்சைகளும், சிங்கள அரசின் முகவர்களும், மாற்றியக்க வல்லூறுகள், சீன, பாகிஸ்தானிய, முகவர்களின் விசுவாசிகளும், தம்மை அறியாமலே எதிரிகளின் பணித்திட்டத்திற்கு தமது செயல்களால் ஆதரளிப்பவர்களும் பல்வேறு முறையில் ஈழத்தமிழரின் அறிவியல் போராட்டத்திற்கு தடையாக மாறியவண்ணமே இருந்தார்கள். இன்றும் இருக்கின்றார்கள்.

ஆனாலும் தொடர்ச்சியான அறிவியல் போராட்டத்தின் எழுச்சியும் வேகமும் ஆயுத போராட்டத்தின் கீழ் அணிதிரண்டு நின்ற மக்களை ஒன்றாக அணிதிரட்டி, சரியான பாதையை நோக்கி நகரச் செய்ய வைப்பார்கள். இந்த அறிவியல் யுத்தமானது நிச்சயமாக சனநாயக கொள்கையுடன் மக்களின் விருப்பிற்குரிய முறையை கையாளும். அறிவியல்போராட்ட வெற்றியை ஈழத்தமிழர்களும் இந்த உலகமும் நிச்சயமாக கண்ணுறும்.

**காவியா (நிலா)**
**09:12**
**லண்டன்**
**28/07/2021**